# நிகழ்ச்சிகளுக்காக எவ்வாறு பதிவு செய்வது

ஆகஸ்ட் 15 முதல் வழக்கமான கோடைக் கால நிகழ்சிகளுக்கான பதிவு தொடங்குகிறது. பதிவு செய்ய, நீங்கள் புதிய நிகழ்ச்சி பதிவு அமைப்பில் ஒரு கணக்கை வைத்திருக்க வேண்டும். ஒரு கணக்கை எவ்வாறு உருவாக்குவது என்பதற்கான வழிமுறைகளைக் கொண்ட PDF இது. *(தொடர்புடைய மொழிபெயர்ப்புகளுக்கான ஹைப்பர்லிங்க்)*

கவனத்திற்கு: உங்கள் முழு முகவரியும் அமைப்பில் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் முகவரி முழுமையாக இல்லாவிட்டால் நீங்கள் குடியிருப்பாளராகப் பதிவு செய்ய முடியாது.

## படி ஒன்று:

Markham.ca/RegisterNow என்ற இணையதளத்திற்குச் சென்று பச்சை நிறத்தில் இருக்கும் "பதிவுசெய்க" அல்லது "உள்நுழைக" என்ற பட்டனைக் கிளிக் செய்யுங்கள். உங்கள் மின்னஞ்சல் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி உள்நுழையுங்கள்.

## படி இரண்டு:

- திரையின் மேற்பகுதியில் உள்ள "நிகழ்ச்சிகள் & செயல்பாடுகள்" தாவலுக்குச் செல்லுங்கள்.
  - கீழ்தோன்றும் மெனுவிலிருந்து, "பதிவுசெய்யப்பட்ட நிகழ்ச்சிகள்" என்பதைத் தேர்ந்தெடுங்கள்.

## படி 3: ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி அல்லது செயல்பாட்டைத் தேடுதல்

**தேடல் விருப்பம் 1:**

இடபுறத்தில் உள்ள வடிப்பான் விருப்பத்தைப் பயன்படுத்தி உங்கள் தேடல் முடிவுகளைத் துல்லியமாக்குங்கள். முக்கியமான தேடல் சொற்கள், இருப்பிடம், சேவை, தேதி வரம்பு, வாரத்தின் நாட்கள் அல்லது வயது ஆகியவற்றைப் பயன்படுத்தி வடிகட்டலாம்.

**தேடல் விருப்பம் 2:**

என்னென்ன வகையான பாடங்கள் உங்களுக்கு உள்ளன என்பதைப் பார்க்க நிகழ்ச்சி வகைகள் மற்றும் விருப்பங்கள் மூலம் தேடிப்பாருங்கள்.

## படி 4: ஒரு நிகழ்ச்சி அல்லது செயல்பாட்டைத் தேர்ந்தெடுத்தல்

ஒரு வகையைத் தேர்ந்தெடுத்தப் பிறகு, செயல்பாட்டைத் தேர்ந்தெடுங்கள். நீங்கள் அதைத் தேர்ந்தெடுத்ததும் கிடைக்கக்கூடிய அனைத்து தேதிகள், நேரங்கள் மற்றும் இடங்களைப் பார்ப்பீர்கள்.

## படி 5: பதிவுசெய்தலை நிறைவுசெய்தல்

நீங்கள் பதிவு செய்ய ஆர்வமாக இருக்கும் நிகழ்ச்சியில், "பதிவுசெய்க" என்பதைத் தேர்ந்தெடுங்கள். இந்த நிகழ்ச்சிக்காகப் பதிவுசெய்யும் குடும்ப உறுப்பினர்(களை) தேர்ந்தெடுங்கள். உங்கள் பேமெண்ட் தகவலை உள்ளிட்டு, பரிவர்த்தனையைச் செயல்படுத்தி பதிவு செய்தலை நிறைவுசெய்ய பின்வரும் படிகளைப் பின்பற்றுங்கள்.

## படி 6: உறுதிப்படுத்துதல்

உங்கள் பதிவு செய்தல் முடிந்ததும், உறுதிப்படுத்தல் மற்றும் ரசீதுடன் ஒரு மின்னஞ்சலைப் பெறுவீர்கள். பதிவு அமைப்பில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து நிகழ்ச்சிகளையும் செயல்பாடுகளையும் உங்கள் வாடிக்கையாளர் விவரங்கள் திரையில் "அட்டவணை" என்பதில் உங்களால் பார்க்க முடியும்.